## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (ஆகஸ்ட் 2020)

## SAS 4143 Sociology of Media & Communication

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

01. (அ) தொடர்பாடல் (Communication), வெகுஜன தொடர்பாடல் (Mass Communication) எனும் எண்ணக்கருக்களைத் தெளிவுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(ஆ) "சமூகத்தில் பல்வேறு கருத்துக்களை உருவாக்குவதிலும் சமூக நிலவுகைக்கும் அவசியமானதொன்றாக தொடர்பாடல் தொழிற்படுகின்றது." விளக்குக.

(12 புள்ளிகள்)

02. (அ) தகவல் தொடர்பாடலின் அடிப்படை மூலக்கூறுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) ஓர் நபருக்குள் நிகழும் தொடர்பாடல் எத்தகையதென்பதைக் குறிப்பிட்டு, அவை தொடர்பான விளக்கங்களை எடுத்துக் காட்டுகளுடன் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

03. (அ) தொடர்பாடலின் இயல்பு எத்தகையதென்பதை விபரிக்க.

(08 புள்ளிகள்)

(ஆ) ஆளிடைத் தொடர்பாடலின் (Inter Personal Communication) வகைகளையும்; இத்தொடர்பாடலில் கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களையும் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

### பகுதி – II

01. சமூக விழிப்பூட்டலில் ஊடகங்களின் வகிபாகத்தினையும் அதனை ஏற்றுக் கடைப்பிடிப்பதில் மக்களிடையே காணப்படும் மனப்போக்கினையும் இலங்கையின் அண்மைக்கால ஊடகச் செயற்பாடுகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. "தேசிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட தொடர்பாடலை வலியுறுத்தவதே அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கருவாகும்." பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

03. தகவல் தொடர்பின் அடிப்படை மாதிரிகளுள் இரண்டினைத் தெரிவுசெய்து ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

04. மாற்றுத் தொடர்பாடல் (Alternative Communication) என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? சமூகத்தில் இத்தொடர்பாடலின் ஆரம்பம், அதன் பண்புகள், இத்தொடர்பாடலின் தேவைப்பாடு என்பவற்றைப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)